உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்


17.09.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் C.W.E முகாமையாளர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17.09.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



எங்கள் குடும்ப விளக்காய்
ஓயாது ஒளிரும் தீபமாய்
ஓங்கி ஒலிக்கும் நாதமாய்
வாழும் காலம் எல்லாம் வழிகாட்டிய
மனிதருள் மாணிக்கமாய்
அன்பு கனிந்த பேரொளியாய் இன்சொல்
பேசி அன்புடன் எம்மை பேணி
காத்து கல்வி புகட்டி அனைவருடனும்
பாசத்துடனும் பண்புடனும்
இறக்கும்வரை இன்முகத்தினராய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது குலதெய்வத்தின்
திருப்பாதங்களில் இம் மலரினை
காணிக்கையாக்குகின்றோம்



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



தோற்றம்
1944. 08. 01

மறைவு
2013. 08. 18

# அமரர்
# திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கினும் உனை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

## திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரம் உலகும் கழறவுளறி உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை சுவடுகள்

மாதகலில் "எஸ்வி" என்றாலே வேலுப்பிள்ளை கந்தசாமி என்று யாருக்கும் தெரியும் அளவிற்கு மாதகலில் அறிமுகமானவரே கந்தசாமி அவர்கள். மாதகல் வடக்கில் வாழ்ந்த திரு.திருமதி வேலுப்பிள்ளை பாக்கியம் இணையருக்கு 01.08.1944 மூத்த மகனாகப் பிறந்த இவருக்கு நான்கு உடன்பிறப்புக்கள். இவர் தன் ஆரம்ப கல்வியை விக்னேஸ்வரா வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சென்.ஜோசவ் மகாவித்தியாலயத்திலும் பயின்று சாதாரண பரீட்சையில் சிறந்த மதிப்பீடுகளை பெற்று கொண்டார். மேற்படிப்பைத் தொடரும் தகைமையும், திறமையும் இருந்த போதிலும் குடும்ப சூழல் காரணமாகவும் தன் தந்தையின் வேண்டுகோளுக்கிணங்கவும் 1962 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் பணியாளராகச் சேர்ந்து கொண்டார். பின்னர் சுன்னாகம், மட்டக்களப்பு, கல்முனை, அனுராதபுரம், திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் பணியாற்றி பின்னர் உள்நாட்டு யுத்தம் காரணமாக கொழும்புக்கு இடமாற்றம் பெற்றும் தொடர்ந்து மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் நீதியும் நியாயத்துடனும் பல இன்னல்கள், மிரட்டல்கள் மத்தியிலே அந்நிய மொழியாருடன் சம பதவியிலே அங்கம் வகித்தமை இவருடைய துணிவினை எடுத்து காட்டுகின்றது. சிறுவயதில் இருந்தே உழைக்கும் ஆர்வம் கொண்ட இவருக்கு மிக குறுகிய காலத்திலே கூட்டுறவு மொத்த விற்பனை முகாமையாளர் எனும் பதவி கிடைத்தது.

இதே காலங்களில் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் நிர்வாகசபை உறுப்பினராகவும், மாதகல் பிரதேச மக்கள் பிரதிநிதியாகவும் சேவையாற்றினார். பொது நல நோக்குடைய இவர் இடதுசாரிக் கருத்துக் கொண்ட அரசியல்வாதிகளின் நட்பை நாடியதில் வியப்பேதும் தென்படவில்லை. அடிமட்ட மக்களை நேசிக்கும் அவரது மனப்பாங்கு ஊரில் அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழக வழியமைத்தது. அத்துடன் ஊரபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தூண்டியது. காஞ்சிபுரம் விவசாயிகள் சங்கத்தை ஆரம்பித்து வைத்து அதனூடாக வறிய விவசாய உழைப்பாளிகளுக்கு வழிகாட்ட உதவினார். மக்கள் சேவையை மகேசன் சேவையாக கருதினார் என்றே கூற வேண்டும்.

இவர் தனது சிறிய வயதிலே படிப்பில் மட்டுமன்றி கலைத்திறன், சமூகநலன் போன்ற வற்றிலும் ஆர்வம் உள்ளவராக விளங்கினார். நடிப்பில் இருந்த காதல் அவரை அணைக்கவே தோழர்களும் தோள் கொடுக்க நாடகங்கள் பலவற்றை இவர் சார்ந்த மறுமலர்ச்சி நாடக மன்றத்தால் அரங்கேற்றினார். அவற்றுள் கோவலன் சரித்திர நாடகம், ஆச்சி சொல்லை தட்டாதே, பாஞ்சாலி சபதம், சந்தையிலே மாப்பிள்ளை, கண்ணகி, இறுதிப் பரிசு போன்றவற்றை குறிப்பிடலாம். தனது நடிப்புத் திறனால் மக்களின் மனங்களில் ஒரு நாயகனாக இடம் பிடித்தார். பெண் வேடம் தாங்கி அவர் நடித்த நாடகங்கள் என்றுமே அழியாத ஓவியங்கள் அதாவது கந்தசாமி ஒரு கலைஞன் என்று சொன்னால் அது மிகையாகாது . அத்துடன் அவர் தனது வீட்டை மரம் செடி கொடிகளினால் அலங்கரித்து, இனிய பழங்கள், காய்கள், கறிகள் என தன்னை சுற்றி இயற்கையான அழகை அமைத்து கொண்டார். இவர் ஒரு இயற்கை பிரியனும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகம், விவசாயம், வீட்டுதோட்டம் என்ற பன்முகத்திலும் தன் வியர்வை சிந்தி குடும்பத்திற்கான கடமையை நிறைவேற்றினார். மணப்பருவம் வந்துவிட்ட தருணத்தில் இவரின் பெற்றோர் கந்தர் சுந்தரம் தம்பதியினரின் புத்திரியான நாகரத்தினம் என்னும் பெயர் கொண்ட பெண்ணை திருமாங்கல்யதானம் செய்து வைத்தனர். இவர்களின் இல்லற வாழ்வை இன்பம் எனும் தேர்ச்சக்கரம் இழுத்து செல்ல தன் உடன் பிறந்தவர்களுக்கு அவர்களின் விருப்பபடியே திருமணம் செய்து வைத்தார். அவர்கள் பரமேஸ்வரி - சுந்தரலிங்கம், புவனேஸ்வரி - துரையப்பா, மகேந்திரன் பேபி சரோஷா, கோணேஸ்வரி - செல்வராசா ஆகியோராவார்.

கந்தசாமி அவர்கள் தமக்கு குழந்தை செல்வங்கள் இல்லாத காரணத்தால் தனது தம்பியின், பிள்ளைகளான அமரர் பேரருள் செல்வி (கவிதா) அமரர். தவேந்திர பாஸ்கரன். குகேந்திர கிருஷ்ணன், சங்கீதா, வனிதா ஆகியோரை தான பிள்ளை களாகவே வளர்த்து வந்தார். இவர்களில் கவிதா, சங்கீதா, வனிதா என்பவர்களை தன்னுடன் அழைத்து சென்று சிறந்த கல்வியை அவர்களுக்கு வழங்கி சிறப்புடன் வளர்த்து வந்தார். சங்கீதா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். பின் அவரை இந்திரன் புவனேஸ்வரி தம்பதியினரின் புதல்வன் மதிவண்ணன் அவர்களுக்கு மணம் முடித்து கொடுத்தார். வனிதா சித்த மருத்துவத்துறையில் 4ம் ஆண்டு மாணவியாக கல்வி பயின்று வருகிறார். தன்னால் தொடர முடியாத மேற்படிப்பை தன் சகோதரர்களும் தன் வளர்ப்பு பிள்ளைகளும படிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராகவே காணப்பட்டார்.

தனது சேவையினை வீட்டிற்கும் நாட்டிற்கும் வழங்கிய இவர் மக்கள் மனத்திலே கௌரவமான இடத்தை பெற்று விளங்கினார். கடலின் எல்லை கரைபோல பணியின் எல்லை இவரை அழைத்த காரணத்தால் தன் 60 வது வயதில் இளைப்பாறினார். உயிர், மூச்சளித்த தன் கிராமத்தை நோக்கி 2003ல் பயணித்தார். அங்கு சென்றும் உழைப்பின் வீரியத்தால் உஷ்ணம் குறையாமல் மீண்டும் பணிகளை மேற்கொண்டார். மாதகல் காங்கேயபுரம் வீதிகளை புனர் நிர்மாணம் செய்ய முயற்சி செய்தார். இவரின் சேவை உணர்வை கருத்தில் கொண்டு 2003 ஆம் ஆண்டு அமைச்சர் சபையினால் சமாதான நீதிவான் பதவி வழங்கி கௌரவிக்கப்பட்டது. இத்தனைக்கும் நடுவே இவர் நீரிழிவு நோய்க்கு இலக்காகியமை ஒரு துன்பகரமான நிகழ்வாக அமைந்து விட்டது.இருந்தாலும் தனது கட்டுப்பாடான வைத்தியச் செயற்பாடுகளினால் பெரிய பாதிப்புக்களிலிருந்தும் தன்னைக் காத்துக் கொண்டார். மனக் கட்டுப்பாடில்லாதவர்கள் சந்திக்கும் சோதனைகளையும், வேதனைகளையும் இவரும் சந்திக்க நேர்ந்தது ஊரறிந்த உண்மையாகும். கடந்த நான்கு ஆண்டுகளாக தீரா நோயினால் படுக்கையில் விழுந்திடவே தனது 69வது வயதில் இறைவன் மடியிலே துயில் கொண்டார்.

எது எப்படியிருந்தபோதிலும் நல்ல மகனாய், சிறந்த உடன்பிறப்பாய், கண்ணிறைந்த கணவனாய். பாசமிக்க தந்தையாய், ஆதரிக்கும் உறவினனாய், அன்பு நிறைந்த நண்பனாய் வாழ்ந்த எஸ்.வி கந்தசாமியின் மறைவு எமக்கெல்லாம் மாறாத சோகத்தையே தந்துள்ளது. அவர் ஆத்மா சாந்தி பெறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் முகம் காணாது ஏங்குகின்றோம்

என் ஆருயிர் தந்தையே! என் ஆருயிர் தந்தையே!
மண்ணுலகம் நீக்கி நீ விண்ணுலகம் சென்றாயோ!
அமைதியை குலைத்த மணியோசையில்
என் உயிர் ஓசை அறுந்ததையா!
நிலவின் ஒளியை காரிருள் மேகம் கவ்வுதையா!
எட்டா நிலவாக என் நிலையானதையா
உன் இதய நதியின் ஓடத்தில் கரை சேர்ந்தவள் நானையா
உன் திரு வதனம் காண துடிக்குதையா!
உன் கள்ளங்கபடற்ற புன்சிரிப்பாலேயே
உன் அக மனம் துலங்குதையா!
என் உயிருக்கு வாழ்வை தேடித்தந்தாயே!
உன் ஆத்மாவை வழியனுப்ப நானில்லையையா!
என் இன்பமும் துன்பமும் நீ ஐயா!
பிரிந்து போன உன்னைவிட - உன் நினைவுகள்
எனக்கொன்றும் நிரந்தரம் ஐயா!



*சங்கீதா மதிவண்ணன்*
*பிரான்ஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகளுடன்..



ஊரறியாத உணர்வுகள் சில என் மனதிலே
உறைந்து கிடக்கும் உன் நினைவுகள்
பேரறிஞன் உன்னை - வெள்ளை தாளெடுத்து
பெருமையாக எழுதிட வே முயலுகின்றேன் முடியவில்லை!

ஓரிரு வார்த்தைகள் ஒழுங்காக நான் எழுதுமுன்னே
தாரை தாரையாய் விழிநீர் பெருகி - உனை
வரைய இருந்த தாள்களெல்லாம்
நனைந்த கதை யாரறிவார்?

சிந்திய கண்ணீரையெல்லாம் உன் நினைவு கரங்கள் துடைத்திடவே
மற்றொரு முறை நான் கவியெழுத முயலுகின்றேன்! - வரைந்திட
முந்தியே "பிள்ளை" என நீ அழைக்கும் பேரொலி கேட்கிறது....
மந்தித்து போகிறது என் மூளை மட்டுமல்ல!
மனதால் நானும் இன்று மரணித்து போனேன் ஐயா!

பால் குடிக்கும் பாலகனாய் நானிருந்த வேளையில்
உன் கரமதனை பிடித்தபடி - உங்கள்
கால் சென்ற திசையதனை கருத்தினில் கொண்டு
நடந்த என் பாதங்களுக்கு அன்று தெரியாதையா!
நீ என்னை தனியே விட்டு செல்வாய் என்று!

பெற்றோரை பிரிந்திருந்தேன் - ஆனால் என்றுமே நான் கலங்கியதில்லை
சற்றேனும் மனதால் நான் தளர்ந்து போனதேயில்லை!
உற்ற என் உடன் பிறப்பிருவர் மீளாத்துயில் கொண்டதினால்
அற்ப பிறவி நானென அழுது புரண்ட வேளை - என் கரம்
பற்றி பிடித்து நானிருக்கிறேன் என்றாய் ஐயா! - ஆனால்
இன்று காற்றினுள் கலந்தாய் ஐயா! மீண்டும் கதற எனை விட்டாய் ஐயா!
நிமிர்ந்த உன் நடையும் அழகு கனிந்த உன் முகமும் - நோயினால்
சரிந்ததுவோ! படுக்கையதில் ஈரிரண்டு காலமதாய்!
காலனைவன் காதல் கொண்டு உன்னை "வா" என்று அழைத்திடவே!
"பிள்ளை" "பிள்ளை" என எனை நீ அழைத்து மடிந்தாயோ!

**இதய வலிகளுடன்**
குகேந்திர கிருஸ்ணர்
வனிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்பணிந்து வேண்டுகிறேன்!

நாங்கள் உடன்பிறப்புகள் ஐந்து பேர். எங்களில் மூத்தவரே அண்ணா. ஆரம்ப காலத்தில் பெற்றோர் வழிநடத்தலுடன் பள்ளிப்படிப்பை மேற்கொண்ட நாங்கள் அண்ணாதன் காலில் நிற்கத் தொடங்கியதும் அவரது கைகளைப் பற்றிக் கொண்டோம். அவரும் எம்மைப் பக்குவமாக வழிநடத்தினார். மேற்படிப்பைத் தொடராது தனது இளவயதிலேயே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் பணிமேற்கொண்ட அண்ணா தான் தொடரமுடியாத கல்வியை நாம் தொடரவேண்டுமென்று நம்மை நெறிப்படுத்தியமை எங்கள் நெஞ்சமெல் லாம் இன்றும் நிறைந்து நிற்கிறது.

'ஆள்பாதி ஆடைபாதி' என்பார்கள் அதற்கேற்ப சமூகஅந்தஸ்தை உயர்த்தும் வகையில் கண்ணைக் கவரும் அழகான ஆடைகளை எமக்கெல்லாம் வாங்கித்தந்தார். இவ்வாறு சிறுசிறு விடயங்களிலும் எங்களை அக்கறையோடு கவனித்து எங்கள் மனம் கோணாது நடந்த அண்ணா எனது திருமணத்திலும் பெருந்தன்மையோடும் தூரப்பார்வையோடும் நடந்துகொண்டதை நினைக்கக் கண்கள் பனிக்கின்றன. இப்படித்தான் திருமணங்கள் நடைபெறவேண்டுமென்று வரையறைபோட்ட அன்றைய காலகட்டத்தில் எனது விருப்பத்திற்கு முக்கியத்துவம் அளித்து, நான் விரும்பியவரையே கைப்பிடிக்க உதவினார். அந்த நல்ல உள்ளத்தின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் சிதையாதவாறு ஒருவாழ்க்கையை வாழ்ந்து காட்டமுடிந்தமை குறித்து உள்ளூர மகிழ்ச்சியடைகிறேன்.

புதுமணத் தம்பதிகளாய் வாழ்க்கையை ஆரம்பித்த நாம் தனிக்குடித்தனம் நடத்துவதற்கு ஏற்றவகையில் ஒரு புது வீட்டைக் கட்டிக்கொள்ளவேண்டி இருந்தபோது அதற்கான எல்லா உதவிகளையும் செய்து தந்ததை நானும் என் கணவரும் நன்றிப் பெருக்கோடு நினைவு கூருகிறோம். எங்கள் குடும்பத்தில் முதல் மழலையாக மகள் பிறந்தபோது அவளுக்குப் பெயர் சூட்டி அவளைத் தனது மகளாகவே கருதிச் சீராட்டிய நினைவுகள் என்றென்றும் மறக்கமுடியாதவை.

குருவிக் கூடுபோல் கூடிவாழ்ந்த ஈழத்தமிழ்க் குடும்பங்களெல்லாம் கொடிய போரால் எவ்வாறு சிதைந்து சின்னாபின்னமாயினவோ அதுபோலவே நாமும் உறவுடைந்து ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து வெளிநாடுவர நேர்ந்துவிட்டது. படுக்கையிற் கிடந்த அண்ணனைக் கூடப்பார்க்க முடியாத பாவியாகி விட்டேனே என்ற கவலையும் கண்ணீரும் இன்று என்னையும் ஒரு நோயாளியாக்கிவிட்டது.

அண்ணா! ஆறாத்துயரால் அல்லற்படும் நான் உங்கள் ஆத்மா சாந்தியடையவேண்டு மென்று நுணசை முருகன் தாழ்பணிந்து வேண்டுகிறேன்.


ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

உன்அன்புச் சகோதரி,
பரமேஸ்வரி சுந்தரலிங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமதன்பு அண்ணாவே!

எம தருமைப் பெற்றோர்கள் உமக்கு வைத்த பெயரே கந்தசாமி
உம தருமை நண்பர்கள் சூட்டிய பெயரே S.V.K
S.V ன்றாலோ எல்லோர்க்கும் தெரியுமண்ணா
எங்கள் பெயர் சொன்னால் விளங்கவில்லையென்பார்கள்
S.V யின் சகோதரர் என்றால் எல்லோர்க்கும் விளங்குமண்ணா
நாம் கண் கலங்கி நின்றாலோ கருணையினால் போக்கிடுவீர்
நாம் மனம் நொந்து நின்றாலோ மகிழ்ச்சி தந்து போக்கிடுவீா
நாம் புண்பட்டு நின்றாலோ புன்னகையால் போக்கிடுவீர்
நாம் ஐவர் உடன் பிறந்து அருமையாய் வாழ்க்கையிலே
உம்மை மட்டும் எம்மிடமிருந்து பிரித்த மாயமென்னண்ணா
நீர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எமதருமை அண்ணாவே
நாம் என்றென்றும் மறக்கமாட்டோமண்ணா!

இங்ஙனம்
சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

சோதனை மேல் சோதனை
ஊரில்லா எமக்கு தொடர்ச்சியான வேதனை
ஓர் இழப்பு மறையும் முன்னே அடுத்தோர் பேரிழப்பு
உனக்கோர் பிள்ளையில்லை ஊருக்கெல்லாம் அப்பா-நீ
ஆசானாய் ஆசிரியனாய் வளர்ப்பு தந்தையாய் பல பேரை ஆளாக்கினாய்
உனக்கு நாம் எல்லாம் பிறக்காத பிள்ளைகள்
இப்பாரினிலே நல்ல ஊரினிலே மிக்க கண்ணியமாக - ஒரு
உத்தமனாக வளர்ந்து வாழ்ந்த அத்தானே
நீர் விட்டு சென்ற சுவடுகளை நாம்
அடியொற்றி விளைகின்றோம்!

கொள்ளி வைக்க முயலுகின்றோம் - எம்மை அள்ளி
செல்ல யாருமில்லை

மாற்றான் தேசத்தில் மகுடம் இல்லா வாழ்வெமக்கு
சேர்ந்து ஒப்பாரி வைக்கவும் முடியவில்லை.
தனித்தனி வேலையிலே அழுது அழுது உருகுகின்றோம்!
அருமை அத்தானே உமது ஆத்மா சாந்தி பெற்று
முருகன் காலில் இளைப்பாற இங்கிருந்து பிரார்த்திக்கின்றோம்!
கந்தசாமிக்காக -கந்தசாமியிடமே பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



கனத்த இதயத்துடன்
**சந்திரன்**
(பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக்குமுறல்

எங்கள் ஐயா!

உலகம் என்றால் இதுதான் என்பாய் சாதி எதுவும் இல்லையென்பாய்!
கலகம் எதுவும் இல்லாமலே கனிவாய் வாழ வேண்டுமென்பாய்!
இல்லையென்று சொல்ல மாட்டாய் இருப்பதையெல்லாம் அள்ளி கொடுப்பாய்!
பொல்லாத காலனவன் நீ இல்லையென மாட்டாய் என்று அறிந்து
வருந்தி உன்னை அழைத்தானோ!
உங்கள் பொன்னான உடலது பொசுங்கியதோ நெருப்பிலென
நெஞ்சாற நாம் நினைக்கையிலே நொருங்குகிறோம் மீண்டும் மீண்டும்



மகேந்திரன் குடும்பம்
[வேவி சரோஷா]]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத நினைவுகள்.....

மாதகலின் வனப்பையும், அதன் வளத்தையும் முழுமையாக அனுபவித்த நண்பர் கூட்டத்தில் நானும் நீயும் அன்று பங்காளிகள். பள்ளிப் பருவத்திலிருந்து வளர்ந்து பெரியவரான காலம்வரை நாங்கள் நண்பர்களாகவே இருக்கமுடிந்ததும் ஒரு பேறுதான்.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியிலிருந்து ஊர்ச் சனசமூக நிலையப் போட்டிகள் கலைவிழா நிகழ்ச்சிகள் என்பனவரை முதலிடத்துக்கு மோதிக்கொண்ட நாம் பின்பு பொதுநோக்காற் பிணிக்கப்பட்ட நண்பர்களாக மாறினோம். அந்த நண்பர் வட்டத்தினூடாக ஆரோக்கியமான நல்லபல காரியங்களைச் செய்யமுடிந்தது மனதுக்கு இன்றும் ஆறுதலாகவே இருக்கிறது.

அரசியல், கலை, இலக்கியம், நாடகம், விளையாட்டு என்பவற்றில் நாம் ஈடுபாடு காட்டிய போதிலும் நாடகத்துறையில் நாம் காட்டிய அக்கறையும் ஆர்வமும் மறக்கமுடியாதன. அன்று திரு. செல்லத்துரை அண்ணரின் வழிகாட்டலில் மறுமலர்ச்சி நாடக மன்றத்தை அமைத்து அதனூடாகப் பல நாடகங்களை மேடையேற்றிய நினைவு இன்றும் நெஞ்சில் வந்து நிழலாடுகிறது. அந்த நாடகங்களிலெல்லாம் பெண்வேடம் தாங்கும் நபர்களாக நீயும், நானும் இருந்ததும் மறக்கமுடியாத நினைவுகளே. சரித்திர நாடகங்கள், கவிதை நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், சமூக சீர்திருத்த நாடகங்கள், தாளலய நாடகங்கள் என்று அவை வகைப்படுத்துமாறு அமைந்திருந்தன.

இரவிரவாக நாடகங்களை எழுதி அவற்றை ஒத்திகை பார்த்து மேடையேற்றி மகிழ்ந்த காலம் எம்மட்டில் ஒரு பொன்னான காலம் என்றே கருதுகிறேன். இவ்வாறு வாசிகசாலை, சனசமூக நிலையம் என்பவற்றின் வளர்ச்சிக்காகச் செய்த தொண்டு நடவடிக்கைகளெல்லாம் எம்மையுமறியாமல் எம்மைச் சமூகம் சார்ந்த நடவடிக்கைகளில் நாட்டம் கொண்டவர்களாக மாற்றியுள்ளன என்றே கருதவேண்டியுள்ளது. இந்த நண்பர் கூட்டத்தில் நீயும் அதிய பங்கு வகித்தாய் என்பதை நாம் எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக இருந்து பெற்ற வருமானத்தில் ஒரு பகுதியைப் பொதுப்பணிக்காகவும், நண்பர்கட்காகவும் நீ செலவு செய்ததை நாமெல்லாம் நினைத்துப் பார்க்கிறோம். எமக்கு ஒரு வயதினரே நண்பர்களாக இருந்த காலகட்டத்தில் உனக்கோ எல்லா வயதினரும் நண்பர்களாக விளங்கியது மாதகலில் ஒரு புதினமாகவே பார்க்கப்பட்டது. இது உனது சேர்த்தணைக்கும் இயல்பைக் காட்டுவதாகவே விளங்கியது என்பது எனது கருத்து.

மழலைச் செல்வம் இல்லாதபோதிலும் விரக்தி கொள்ளாத மனநிலையோடு உன்சகோதரங்களின் குழந்தைகளை உன்குழந்தைகளாக ஏற்று நடத்தி அவர்கள் ஏற்றத்திற்குப் பாடுபட்டமை உனது பரந்தமனப்பான்மையைப் படம் பிடித்துக் காட்டியது. எதையும் பெரிதுபடுத்தி மனஞ்சலிக்காத உன்மனப்பாங்கு உனது பக்குவப்பட்ட மனதிற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. நோயில் விழுந்து பாயிற் படுக்க நேர்ந்தபோதும் கூட 'நான் நானாகவே இருப்பேன்' என்று நடந்து கொண்டமை உனது மனவைராக்கியத்தை எமக்கு எடுத்துக் காட்டியது.

நிழலாடும் நினைவுகளை எமது நெஞ்சங்களிலெல்லாம் விதைத்து எம்மை விட்டுப் பிரிந்த உனது பிரிவை எண்ணி உளமார வருந்தினாலும் உனது ஆத்மா அமைதிபெறுமென்று பூரணமாக நம்புகிறேன்.

அன்பு நண்பன்
சபா. அருள்சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம் நிலைவைகள்

நண்பன் வேலுப்பிள்ளை கந்தசாமியுடன் சிறு வயது முதல் தொடர்பு ஏற்பட்டது. இவர் தனது ஆரம்ப கல்வியை மாதகல் விக்னேஸ்வரா வித்தியசாலையில் கற்றார், முதல் எனது கல்வியும் அவருடனேயே சென்றது. இவரது கல்வியில் இவரின் தாயார் பெரிதும் அக்கறை செலுத்தினர். பாடசாலையில் ஏதும் பிரச்னை என்றாலும் தாயார் வீடு வந்து விசாரிப்பார், கா.பொ.த சாதாரண பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று மேற்படிப்பு படிக்க முனைந்த போதும் தந்தையார் சொற்கேட்டு CWE இல் வேலைக்கு சேர்ந்தார், இளமை காலத்தில் நாங்கள் இடதுசாரி கொள்கையில் பற்று உள்ளவர்களாக செயற்பட்டோம். இவர் பின்னர் பெற்றோரால் தீர்மானிக்கப்பட்ட திருமணத்தில் இணைந்தார். குடும்ப வாழ்வில் இணைந்தாலும் பொது வேலைகளிலும் கலைத்துறையிலும் ஈடுபாடு காட்டினார். நாடக கலைஞனாக .மாறி திறம்பட நடித்து காட்டினார். . நாடக பிரதியாக்கங்கள் செய்யும் போது மாதகல் செல்வா, ,அருள்சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோர் முழு மூச்சாக கருத்து பரிமாறி நாடகங்கள் எழுதுவர் .நான் குழாத்தில் இருந்த போதும் விலகி இருப்பேன். கந்தசாமி நடிகராக , வசன நடையை மெருகூட்டுபவராக, நெறியாள்கையில் மாற்றங்களை கையாளுபவராக செயற்பட்டார். இவர்கள் மேடை ஏற்றிய எந்த நாடகமும் சோர்வடைந்து போனதில்லை அவற்றிலெல்லாம் தனது முத்திரையை பதித்தவர் கந்தசாமி, இதனால் இவரை சிறந்த நடிகர் என்று சகலரும் வாழ்த்துவார்கள், காலம் மாறியது பல்வேறு இடங்களில் கடமையாற்றி. ஓய்வு பெற்று ஊர் திரும்பிய போதும் நாட்டுப்பற்று மாறவில்லை

இறுதி காலங்களில் இவர் சுகயீனப்பட்டு வீடே தஞ்சம் என வாழ்ந்து இயற்கை எய்தினர். இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். இவர் நினைவாக பாலர் பாச்செண்டு நண்பர்கள் சார்பில் வெளியிடப்படுகிறது

வி. சிற்றம்பலம்

நண்பர் குழாம் சார்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலுப்பிள்ளை கந்தசாமி சமூக அலுவலர்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாதகலில் விவசாயி வேலுப்பிள்ளை, பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வனாக அவதரித்த கந்தசாமி அவர்கள் எம்மிலும் வயதில் பெரியவர். இவர் எம்மால் குறிப்பிடக்கூடிய ஒரு தொடர்பு இருந்தபோதும் குறைந்த வயது காலத்தில் இவரைப் பற்றி அறிந்திருக்க முடியவில்லை. கல்வித்துறையில் சிறந்து விளங்கி இளைஞராக இருந்த காலங்களில் கலைத்துறையில் ஆர்வமுள்ளவராக இருந்தார் என்பது அறியக்கூடியதாக இருந்தது. இவர் தனது தொழில் ஒன்றைத் தேடிக்கொண்டாலும் சமூக நலனில் அக்கறையுள்ளவராகக் காணப்பட்டு பொது நிறுவனங்கள் ஊடாக பல சேவைகளை மக்களுக்கு வழங்கி வந்தார். சமூக சேவையாற்றக்கூடிய நிறுவனங்களில் ஒன்றான கூட்டுறவு அமைப்பில் 1975ம் ஆண்டுக் காலப்பகுதி தொடக்கம் 1979ம் ஆண்டு காலப்பகுதி வரை மூன்றரை ஆண்டு காலப்பகுதியில் மாதகல் மத்தி கிளை நிலையத்தில் தலைவராகவும் அக்காலப் பகுதியில் அக்கிளையின் பிரதிநிதியாக பண்டத்தரிப்பு பரிஷ்.ப.நோ.கூ.சங்கத்தில் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் இச் சங்கமானது பல புதிய தொழிற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும்போது துடிப்புள்ள ஒரு நெறியாளராக இருந்து அதன் வளர்ச்சியில் பங்கேற்று உழைத்தார். அவரது சேவையின் மூலம் இவ் எல்லைப் பரப்பிலுள்ள மக்கள் சிறந்த பயனை அடையக்கூடியதாக இருந்தது. இதற்காக கூட்டுறவு சங்க அமைப்பானது இவரை நினைவு கூர வேண்டிய நிலை உள்ளது. மேலும் பல சேவைகளை இவர் ஆற்றி வந்ததைக் கருத்திற்கொண்டு அப்போதிருந்த அமைச்சர் ஒருவரால் பாராட்டப் பெற்றதோடு கௌரவிப்பாக சமாதான நீதிவான் பதவியும் கிடைக்கப் பெற்றார். இவரிடமிருந்து இன்னும் பல சேவைகளைப் பெற மாதகல் மக்கள் எண்ணியிருந்தபோதும் இவரது உடல்நிலைப் பாதிப்புக் காரணமாக தொடர்ந்து சமூகசேவையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டது. இது இக்கிராம மக்களுக்குக் கிடைத்த பின்னடைவாகும். இவரது சிந்தனைகளை நிறைவேற்ற வேண்டியது இவர் செயற்பட்ட சமூக நிறுவனங்களிலுள்ள பொறுப்பாகும். இவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்பதோடு இவரின் துயரால் பிரிவுற்றிருக்கும் குடும்பத்தினரும் மன அமைதி பெற இறையருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

க.நா.சபாரத்தினம்
பொது முகாமையாளர்.
பண்டத்தரிப்பு பரிஷ்.ப.நோ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மடல்

வேலுப்பிள்ளை வேர் ஊன்றிய வேலாயுதமே!
இன்று வேர் அறுந்து சென்றுவிட்டாய் நீ ஐயா
புலம்புகின்றோம் நாம் புலம்புகின்றோம்!
வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நாம் என்ன செய்கிறோம்
அதுவே நாளைய நம் வரலாறு!
நாட்டுக்கும் செய்தாய்! வீட்டுக்கும் செய்தாய்!
அதனால் தான் இன்று நீ பேசப்படுகின்றாய்!
இல்லற வாழ்வை நீ இனிதே கழித்த நீ
இறைச்செல்வம் இல்லாவிட்டாலும்
இதமாய் தத்தெடுத்தாயே மூன்று செல்வங்களை நீ!
இன்று தன் பிள்ளைகளையே தான்தோன்றி தனமாக
வளர்க்கும் காலத்தில் - நீ வளர்த்தெடுத்தாயே
செல்வங்களை அதுவே உன் வரலாற்றின் காலச்சுவடுகள்
இன்னும் எத்தனையோ செய்துவிட்டு சென்றுவிட்டாய்
ஐயா நீ! சென்றிட்ட உன்னை செய்த கண்கள்
பார்த்திருக்க - சிவரூபமாய் சிவலோகம் சென்றுவிட்டாய்!



**வரன் குடும்பம்,**
**தவனேஸ் குடும்பம்,**
**(பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனத்த நெஞ்சத்துடன் கலங்குகின்றேன்...

உண்மை தானா இது உண்மை தானா!
என் காதுகளில் கேட்டது உண்மை தானா

எங்கள் குலவிளக்கு அணைந்தது தானா?
பாசமான மனைவி அன்பான பிள்ளைகள்
என பிரியமுடன் இருந்தாயே!
உன் தம்பி பிள்ளைகளை சொந்த பிள்ளைகள்
போல் பாசமூட்டி வளர்த்தாயே
உனக்காக வாழாமல் ஊருக்காக
வாழ்ந்த உத்தமன் ஐயா நீ!
உன்னை போன்ற நல்லவர் யார் ஐயா!
நல்லவன் இப்பூமியில் வாழ்ந்தது
காலனுக்கு பொறுக்கவில்லை போலும்

நல்லவர் எல்லோரும் நம்மோடு இருக்க எண்ணி
தேவர்களும் உன்னை அழைத்தனர் போலும் ஐயா!
எங்கள் கந்தசாமி ஐயாவே! நீ இல்லாததை
எண்ணி என் கண்களில் கண்ணீர் அருவி!
இறந்தும் சிலர் வாழ்வார்கள்! நீங்கள்
இன்று மட்டுமல்ல என்றுமே எங்களுடன் வாழ்வீர்கள்!



**உங்கள் பாசம் மறவாத**
குலன் (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமே நான் உன்னை மரணிக்க செய்வேன்



மரணமே!உன்னை!நான்
மரணிக்க செய்யவோர்
தருணத்தை பார்க்கிறேன்
தலைகாட்ட மறுக்கின்றாய்!

ஈவிரக்கம் இல்லாத இராட்சத பிறவி நீ
உன்னை ஓர்நாளில் நான் தொலைக்காமல் விடமாட்டேன்!
கொள்கையே இல்லாமல் கூத்தாடும் மனிதர் போல
துள்ளிக் குதிக்கின்றாய் தொடராது உன் ஆட்டம்!

கோழையே உனக்கென்றோர் கொள்கையே இல்லையா?
எங்கள் குலதெய்வம் உனக்கென்ன இன்னலை தந்துசென்றார்!
காண நாம் துடிக்கின்றோம் கதறி நாம் அழுகின்றோம்
வடிக்கும் எம் கண்ணீருக்கு பதிலளிக்காமல் நீ செல்லமாட்டாய்?

நீட்டோலை படியாமல் நிற்போரை நீவிட்டு
நாட்டையே வழிநடத்திய நல்லவரை ஏன் தின்றாய்?
முட்டாளே உன்னுடைய முதுகுத்தோல் உரித்து தன்
கொட்டத்தை அடக்காமல் குளிராது என் நெஞ்சம்!

என்னை நீ கொல்வதற்குள் என் கையால் உன்னை நான்
கொன்றால் தான் என்னுடைய குருதிக்குமுறலும் அடங்கிடுமே!

எம் நினைவுகளிலிருந்து......
சங்கீதா மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1944. 08. 01

மறைவு
2013. 08. 18

## அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், C. W. E)

**பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்க
ஆரம்ப வளர்ச்சிக் காலகட்டங்களில்
மாதகல் மத்தி கிளை – 02
முன்னாள் கிளைக்குழுத்தலைவராகவும்.
முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும்
உயர்வான சேவையாற்றி
அமரத்துவமடைந்த
அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்களின்
மறைவையொட்டி கண்ணீர் அஞ்சலி
சமர்ப்பிக்கின்றோம்.**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**அன்னாரின் பிரிவால் துயருறும்
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,**
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்களது நினைவை
மீட்டு அவரது பாலிய நண்பர்கள் செலுத்தும்

# கண்ணீர் பூக்கள்



**மண்ணில்**
**1944. 08. 01**

**விண்ணில்**
**2013. 08. 18**

# அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், C. W. E)

அன்பிற்குரிய அருமை நண்பா

இளமைப் பருவத்து இனிய நினைவெல்லாம்
இன்றும் பசுமையாய் எழுந்தெழுந்து வருகிறது

கடந்தகால நினைவுகள் கண்முன்னால் வந்துவந்து
நடந்து வந்த பாதையை நமக்கெல்லாம் நினைவூட்ட
உடைந்துபோன மனதோடு உனை எண்ணி வாடுகின்றோம்

பாடசாலை நாட்கள், பம்பரமாய் நாங்கள்
ஊரெல்லாம் சுற்றிவந்து உறங்காத நினைவுகள்!
நாடகங்கள் போட்டு, நாம் மகிழ்ந்த காலங்கள்!!
பொதுப்பணிகள் செய்து பூரித்த நாட்கள்!

எல்லாம் கண்முன்னால் இன்றுபோற் தெரிகிறது...
இல்லாத போதுதான் இழப்பின் வலி புரிகிறது
பொல்லாத காலனை வெய்ய மனம் துடிக்கிறது
எல்லாமே இயற்கையென்று எண்ண மனம் துணியாதாம்!

நல்லவற்றை ஊருக்காய் நாமெல்லாம் செய்யவெண்ணி
எல்லையற்ற மகிழ்வோடு இணைந்தொன்றி இருக்கையிலே
மெல்ல வந்த நோய்முற்றி மெதுவாகப் படுக்கையிலே
அல்லலுற்று நீ வீழ்ந்தாய் அனைவருக்கும் துயர் தந்தாய்

வாயுமனம் உனக்காக வருந்தியழும் வேளையிதில்
ஓடிவந்து நம்மருகே ஒரு கணம் நீ நிற்பாயா?
நாடி உந்தன் கைப்பற்ற நண்பா நீ வருவாயா???

நல்லவர்கள் நினைவென்றும் நம்மைவிட்டு அகல்வதில்லை...
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்து நீ வாழ்வாய்!

உன் ஆத்மா சாந்திபெற உளம் நெகிழ்ந்து வேண்டுகின்றோம்!!!

உன் அன்புத் தோழர்கள்
மாதகல்
18. 08. 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



மண்ணில்
1944. 08. 01

விண்ணில்
2013. 08. 18

## அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், C. W. E)

**பழகிய நாட்களில்**
**விலகியிருக்க நினைத்ததில்லை**
**உங்களைப் பார்த்திருந்து பசி மறந்தோம்**
**மனித உணர்ச்சியிலே**
**கோபத்தைக் கண்டதில்லை**
**இப்போ உங்கள் முகம் காணாது**
**தவித்து விம்புகின்றோம்**
**பாவத்தை அறியாத உங்களுக்கு**
**ஆண்டவன் சந்நிதியில்**
**ஆத்மா சாந்தியடைய**
**இறைவனை இறைஞ்சுகின்றோம்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குகேந்திரகிஸ்ணனின் நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய்

நீரிழிவு (diabetes) என்பது வளர்ச்சிதை மாற்ற நோய்களின் ஒரு தொகுப்பாகும். தேவையான இன்சுலினை உடல் உற்பத்தி செய்யாத அல்லது உற்பத்தி செய்த இன்சுலினைப் பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்த இயலாத நிலைமையில், இந்நோய் உள்ளவர்களின் இரத்தத்தில் அதிகளவு சர்க்கரை இருக்கும். இந்நோய் இன்சுலின் சமசீர் நிலையை இழப்பதால் ஏற்படுவதாகும். மனித உடம்பில் சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்ற இன்சுலின் அத்தியாவசியமாக உள்ளது. குறிப்பாக, இரத்த சர்க்கரை அளவு சரியாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. எனில் உயர் இரத்த அழுத்தம், நாடிகளின் சுவர்களில் கொழுப்பு படிந்து நாளடைவில் அடைபடுதல், இருதயத் தசைகளுக்கு குருதி வழங்கும் நாடிகளில் ஏற்படும் நோய் மற்றும் பாரிசவாதம் ஆகியவை ஏற்படக்கூடிய ஆபத்தை அதிகரிக்கிறது. இரத்தத்தில் அதிகளவில் சர்க்கரை இருப்பதுஅடிக்கடி சிறுநீர் கழித்தல் (Polyuria), அதிகமாக தாகமெடுத்தல்(Polydipsia), அளப்பரிய பசி (Polyphagia) ஆகிய மரபார்ந்த அறிகுறிகளை உருவாக்குகின்றது.

## நீரிழிவு நோயின் வகைகள்

1. Type I - IDDM - Insulin Dependent Diabetes Mellitus
2. Type II - NIDDM - Non Insulin Dependent Diabetes Mellitus
3. Gestational Diabetes

## நீரிழிவு நோய் யாருக்கு ஏற்படும்

யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இருப்பினும் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், பரம்பரையில் நீரிழிவு நோய் இருப்பவர்கள், எடை அதிகமாக இருப்பவர்கள், ஆகியவர்களுக்கு நீரிழிவு நோய் வர அதிக வாய்ப்புண்டு. இவர்கள், தங்களுடைய மருத்துவரிடம் ஆலோசிப்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு நோயின் அறிகுறிகள்

பல சமயங்களில் அறிகுறிகள் சரியா தென்படாமல் போகிறது சிலபொதுவான அறிகுறிகள்

- ◆ அடிக்கடி சிறுநீர் கழிப்பது
- ◆ அடிக்கடி தாகம்
- ◆ அதிக பசி
- ◆ மிக வேகமாக எடை குறைதல்
- ◆ அதிகமாக சோர்வடைவது
- ◆ கண்பார்வை மங்குதல்
- ◆ வெட்டுகாயம்/சிராய்ப்பு ஆகியவை ஆறுவதற்கு அதிக காலம் பிடித்தல்
- ◆ திரும்ப திரும்ப சருமம்,ஈறு மற்றும் சிறுநீர்ப்பையில் தொற்று நோய்
- ◆ பாதங்களில் உணர்ச்சி குறைவு அல்லது எரிச்சல்

## நீரிழிவு நோயால் ஏற்படக்கூடிய விளைவுகள்

இரண்டாம் வகை நீரழிவு நோயால் ஏற்படக்கூடியவை

- ◆ பார்வை இழப்பு
- ◆ மாரடைப்பு
- ◆ சிறுநீரகக் கோளாறு
- ◆ பக்கவாதம்
- ◆ கால்களை இழத்தல்
- ◆ கோமா மற்றும் இறப்பு

மேலைத்தேய மருத்துவ முறையாயினும். சித்தமருத்துவ முறையாயினும் நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் (causes). நோய் வரும் வழி (Pathogenisis). குறி குணங்கள் (Sign and symptoms). என்பன ஒன்றாகவே உள்ளது. நீரிழிவு நோயை பொறுத்தவரை அதன் சிகிச்சை முறையானது. குருதியில் அதிகரித்துள்ள குளுக்கோசின் அளவை சாதாரண நிலைக்கு கொண்டு வருதலுடன் பக்க விளைவுகளையும் குணப்படுத்தலாகும்.

### பயன்படுத்தும் மூலிகைகள்

1. சிறுகுறிஞ்சா
2. நாவல்பழம்
3. கோவை கிழங்கு
4. வில்வம்பழம். இலை
5. சீந்தில் இலை
6. கொம்பு பாகல்காய்
7. கருவேப்பிலை
8. முள்ளங்கி
9. அவரை
10. ஆலம் பட்டை
11. விளாம்பழம்
12. ஆவாராய்
13. அறக்கீரை
14. மாந்துவிரி
15. முழு நெல்லிக்காய்
16. அழிஞ்சில் பட்டை
17. கடல்ராஞ்சி
18. வெந்தயம்
19. சாத்தாவரி கிழங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பணிவு உடையவன் இன் சொலன் ஆதல்
ஒருவரிற்கு அணி அல்ல மற்று பிற"

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பததலைவராக வாழ்ந்து எம் எல்லோரையும் நல்ல வழிப்படுத்தி நாடு போற்ற வாழ வழி செய்து இன்று பிரிவு எனும் கண்ணீர் கடலில் ஆழ்த்திவிட்டு 18.08.2013 அன்று மீளாத்துயில் கொண்ட எங்கள் குலதெய்வம் அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் அன்னாரின் துயரச் செய்தி கேட்டு தொலைபேசி மூலமாகவும், சமூகவலைத்தளங்கள்மூலமாகவும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், இரங்கல் கூட்டம் நடாத்திய நண்பர்களுக்கும் பல வழிகளிலும் உதவிகளை செய்து தந்தவர்களுக்கும், ஈமக்கிரியைகளிலும் அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும நினைவு மலரை வெளியிட உதவிய அன்பர்களுக்கும் இந்நூலை அச்சிட்டு தந்த கவிதரன், வழக்கம்பரை அச்சகத்தினருக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org